**அக்டோபர் – 12**

# TNPSC துளிகள்

- மத்திய இரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் அவர்கள் நொவ்கர் இரயில் நிலையத்தை சித்தார்த்நகர் இரயில் நிலையம் என்று பெயர் மாற்றியுள்ளார்.
    - உத்தரப் பிரதேசத்தின் சித்தார்த்நகர் மாவட்டத்தில் இது அமைந்துள்ளது.
- மூத்த வங்கியாளர் தினேஷ்குமார் காராவை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் தலைவராக அரசு நியமித்துள்ளது.
    - இவர் ரஜ்னிஷ் குமாருக்குப் பதிலாக பணியமர்கிறார்.
- ரிசர்வ் வங்கியின் மூத்த நிர்வாக இயக்குனரான எம்.ராஜேஸ்வர் ராவை அந்த வங்கியின் துணை ஆளுநராக மத்திய அரசு நியமித்துள்ளது.
    - அவர் என்.எஸ். விஸ்வநாதன் அவர்களை அடுத்து அந்தப் பதவியில் அமர்கிறார்.

# தேசியச் செய்திகள்

## இந்தியப் பருத்திக்கான முதல் நிறுவன அடையாளம் மற்றும் சின்னம்

- மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்கள் இரண்டாம் உலகப் பருத்தி தினத்தன்று இந்தியப் பருத்திக்கான முதல் நிறுவன அடையாளம் மற்றும் சின்னத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இனி இந்தியாவின் உயர்வகைப் பருத்தியானது உலகப் பருத்தி வர்த்தகத்தில் 'கஸ்தூரிப் பருத்தி' என்று அழைக்கப்படும்.
- கஸ்தூரிப் பருத்தியானது வெண்மை, பிரகாசம், மென்மை, தூய்மை, மிளிர்வு, தனித்துவம் மற்றும் இந்தியத் தன்மை ஆகியவற்றை முன்னிறுத்தும்.
- இந்தியாவானது பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது மற்றும் உலகில் மிகப்பெரிய பருத்தி நுகர்வோர் நாடாகவும் உள்ளது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2030 ஆம் ஆண்டிற்குள் 60% உமிழ்வுக் குறைப்பு

- ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றமானது 1990 ஆம் ஆண்டின் நிலைகளுடன் ஒப்பிடும் போது 2030 ஆம் ஆண்டில் தனது உமிழ்வை 60% குறைக்க அதன் காலநிலை இலக்கைப் புதுப்பிக்க வேண்டி வாக்களித்துள்ளது.
- முன்பு 2030 ஆம் ஆண்டிற்குள் 40% உமிழ்வைக் குறைக்கும் இலக்கை அது நிர்ணயித்திருந்தது.
- உலக வனவிலங்கு நிதியம் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 65% என்ற அளவில் அதன் உமிழ்வைக் குறைக்க வேண்டி அதனை வலியுறுத்தின.
- ஜெர்மனியின் தலைமையின் கீழ் இவ்வாக்களிப்பு நடைபெற்றது.

## 7 கரிம மாசுபடுத்திகளின் உறுதிப்படுத்துதல்

- உறுதியான கரிம மாசுபடுத்திகள் (Persistent organic pollutants) குறித்த ஸ்டாக்ஹோம் மாநாட்டின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ள ஏழு வேதிமங்களை அங்கீகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மேலும், அமைச்சரவை தனது ஒப்புதல் வழங்கும் அதிகாரங்களை மத்திய வெளியுறவுத் துறை விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு மாற்றி வழங்கியுள்ளது.
- இந்த அமைச்சகங்கள் முன்பிருந்தே உள்நாட்டு விதிமுறைகளின் கீழ் உறுதியான கரிம மாசுபாடுகளை ஒழுங்குபடுத்தி வருகின்றன.
- 7 உறுதியான கரிம மாசுபடுத்திகள்:
    - குளோர்டெகோன் (Chlordecone)
    - ஹெக்ஸாப்ரோமோபிபெனைல் (Hexabromobiphenyl)
    - ஹெக்ஸாப்ரோமோடிபெனைல் ஈதர் மற்றும் ஹெப்டாப்ரோமோடிபெனைல் ஈதர் (Hexabromodiphenyl ether and Heptabromodiphenyl ether) (வணிக ஆக்டா-பி.டி.இ)
    - டெட்ராப்ரோமோடிஃபெனைல் ஈதர் மற்றும் பென்டாப்ரோமோடிபெனைல் ஈதர் (Tetrabromodiphenyl ether and Pentabromodiphenyl ether) (வணிக பென்டா-பி.டி.இ)
    - பென்டாக்ளோரோபென்சீன் (Pentachlorobenzene)
    - ஹெக்ஸாப்ரோமோசைக்ளோடோடேகேன் (Hexabromocyclododecane) மற்றும்
    - ஹெக்ஸாக்ளோரோபுடாடைன் (Hexachlorobutadiene).

### *ஸ்டாக்ஹோம் மாநாடு*

- உறுதியான கரிம மாசுபடுத்திகள் குறித்த ஸ்டாக்ஹோம் மாநாடு 2001 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- இது சுற்றுச்சூழலையும் மனிதர்களையும் உறுதியான கரிம மாசுபாட்டிலிருந்துப் பாதுகாக்க வேண்டி கையெழுத்திடப்பட்ட ஓர் ஒப்பந்தம் ஆகும்.
- உறுதியான கரிம மாசுபடுத்திகள் ஒளிச்சேர்க்கை, வேதியியல் மற்றும் உயிரியல் செயல்முறைகள் மூலம் சுற்றுச்சூழல் சீரழிவை ஏற்படுத்துவதை எதிர்த்து நிற்கின்ற கரிமக் கலவைப் பொருட்களாகும். .

### கடல் தளத்தில் நுண் நெகிழித் துண்டுகள்

- சி.எஸ்.ஐ.ஆர்.ஓ (காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனம்), என்ற ஒரு ஆஸ்திரேலிய அரசாங்க நிறுவனம் சமீபத்தில் உலகக் கடல் பரப்புத் தளமானது 14 மில்லியன் டன்களுக்கும் அதிகமான நுண் நெகிழித் துண்டுகளால் மாசுபடுத்தப் பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளது.
- ஆண்டுதோறும் கடல்களுக்குள் சென்று சேரும் குப்பைகளானது நிலைகுலைந்து உடைவதின் மூலம் இந்த நுண் நெகிழித் துண்டுகளானது கடல் தளத்தில் நுழைந்துள்ளது.
- கடல் பரப்புத் தளத்தில் நுண் நெகிழித் துண்டுகளின் மீது ஆய்வு மேற்கொள்ளப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- நுண் நெகிழித் துண்டுகள் என்பது 5 மி.மீ அல்லது அதற்கும் குறைவான அளவுடைய சிறிய நெகிழித் துண்டுகள் ஆகும்.
- இவை பெரும்பாலும் அளவில் பெரிய நெகிழிப் பொருட்கள் உடைபடுவதால் உருவாகின்றன.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


### மருத்துவம் அல்லது உடலியலுக்கான நோபல் பரிசு

- இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் ஹார்வி ஜே ஆல்டர் மற்றும் சார்லஸ் எம் ரைஸ் மற்றும் ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானி மைக்கேல் ஹொவ்க்டன் ஆகியோருக்கு மருத்துவம் அல்லது உடலியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு உள்ளது.
- ஹெபடைடிஸ் சி வைரஸைக் கண்டுபிடித்ததற்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- ஹெபடைடிஸ் ஏ மற்றும் பி வைரஸ்களால் விளக்க முடியாத இரத்தத்தில் பரவும் ஹெபடைடிஸின் முக்கிய ஆதாரத்தை விளக்க இந்த மூவரின் பணி உதவி இருக்கின்றது.

- இவர்களது கண்டுபிடிப்பின் காரணமாக, வைரஸிற்கான அதிக உணர்திறன் வாய்ந்த இரத்தப் பரிசோதனைகள் இப்போது கிடைக்கின்றன. இவை அடிப்படையில் உலகின் பல பகுதிகளிலும் பரிமாற்றத்திற்குப் பிந்தைய ஹெபடைடிஸை (Post-transfusion hepatitis) நீக்கி, உலக ஆரோக்கியத்தைப் பெரிதும் மேம்படுத்தி வருகின்றன.
- இவர்களின் கண்டுபிடிப்பானது ஹெபடைடிஸ் சி வைரஸிற்கு எதிரான மருந்துகளின் விரைவான வளர்ச்சியை அனுமதித்துள்ளது. மேலும் வரலாற்றில் முதல் முறையாக, தற்போது இந்த நோயைக் குணப்படுத்த இயலும்.


***ஹெபடைடிஸ் பற்றி:***

- ஹெபடைடிஸ் என்பது கல்லீரலின் ஒரு அழற்சியாகும்.
- இந்த நிலை தானாகக் குறையலாம் அல்லது இழைநார்ப் பெருக்கம் (ஃபைப்ரோஸிஸ்), கல்லீரல் இழைநார் வளர்ச்சி (சிரோசிஸ்) அல்லது கல்லீரல் புற்றுநோய் என்ற நிலைக்கு முன்னேறலாம்.
- ஹெபடைடிஸ் வைரஸ்களே ஹெபடைடிஸ் நோயிற்குப் பொதுவான ஒரு காரணமாகும். ஆனால் பிற நோய்த்தொற்றுகள், நச்சுப் பொருட்கள் மற்றும் தன்னுடல் தாக்குநோய்களும் (auto immune diseases ) ஹெபடைடிஸை ஏற்படுத்தும்.
- ஹெபடைடிஸ் வைரஸ்களில் ஐந்து முக்கிய வகைகள் உள்ளன. அவை ஏ, பி, சி, டி மற்றும் ஈ ஆகும்.
- ஹெபடைடிஸ் ஏ மற்றும் ஈ பொதுவாக கேடான உணவு அல்லது அசுத்தமான தண்ணீரை உட்கொள்வதால் ஏற்படுகின்றன.
- ஹெபடைடிஸ் பி, சி மற்றும் டி ஆகியவை பாதுகாப்பற்ற இரத்தப் பரிமாற்றம் அல்லது அசுத்தமான ஊசிகள், உடலுறவு அல்லது தாயிடமிருந்து குழந்தைக்கு ஆகிய முறைகளில் பரவுகின்றன.
- ஹெபடைடிஸ் ஏ மற்றும் பி ஆகிய இரண்டும் தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடியவை ஆகும்.
- ஆனாலும் ஹெபடைடிஸ் சி-க்கு தடுப்பூசி ஏதும் இல்லை.
- இருப்பினும், இது வைரஸ் தடுப்பு மருந்துகளால் சிகிச்சையளிக்கப் படலாம்.



# முக்கிய தினங்கள்

## உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07




*Source: Ministry of Agriculture, GoI*

- உலகப் பருத்தி தினமானது அக்டோபர் 7, 2019 ஆம் ஆண்டு முதல் உலகளவில் அனுசரிக்கப் படுகிறது.
- ஐந்து கண்டங்களில் 75க்கும் மேற்பட்ட நாடுகளில் வளர்க்கப்படும் ஒரு உலகளாவிய பண்டமாகப் பருத்தியின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜெனீவாவில் உள்ள உலக வர்த்தக அமைப்பினால் இந்நாள் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் தினத்தை 4 நாடுகள் அடங்கிய பருத்திக் குழுவான பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி ஆகியோர் இணைந்து தொடங்கினர்.
- உலக உற்பத்தியில் 80 சதவீதம் அளவிற்குப் பருத்தியானது பிரேசில், சீனா, இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வருகிறது.
- உலகப் பருத்தி உற்பத்தியில் இந்தியா சுமார் 23% உள்ளடக்கி உள்ளது.

# இதரச் செய்திகள்

## வனவிலங்கு வாரம் - அக்டோபர் 02/08

- இந்தியாவின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைக் காத்துப் பாதுகாக்கும் நோக்கில் வனவிலங்கு வாரமானது ஆண்டுதோறும் அக்டோபர் 2 முதல் 8 வரை

இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது.

- முதல் வனவிலங்கு வாரம் 1957 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் வனவிலங்கு வாரமானது 66வது வனவிலங்கு வாரத்தைக் குறிக்கிறது.
- இது 'RoaR (Roar and Revive - கர்ஜனை மற்றும் புத்துயிர்) - மனித விலங்கு உறவுகளை ஆராய்தல்' என்ற கருத்துருவின் கீழ் கொண்டாடப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★